# ★ தமிழ் மக்களின் நிலை குறித்து அக்கறை காட்டாமைக்காக

# ஐ.நா. சபைக்கு முன் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்


விலை ரூபா 6-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 7 இதழ் 262

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24 - 10 - 1995


(நியூயோர்க்)

இலங்கையில் சிறுபான்மை இனமான தமிழ் மக்களுக்கு அரசு இழைக்கும் அநீதிகள் குறித்து, ஐக்கிய நாடுகள் சபை அக்கறை காட்டாதது குறித்து ஐக்கிய நாடுகள் சபை முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. போர் காரணமாக வடக்கு-கிழக்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப் படுகின்றனர்.

தமது சொந்த நாட்டு மக்கள் மீதே இலங்கை அரசு விமானக் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றது.

இடபடியான மனித உரிமை

(5ம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழிகளை அமைக்க அரசியல்துறை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இல்லங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், மக்கள் கூடு மிடங்களில் பதுங்கு குழிகளை அமைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை கேட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றிரவு அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:-

மக்களே! சிறிலங்கா அரசின் திட்டமிட்ட தமிழின ஒழிப்பு நடவடிக்கையின் உச்சக்கட்டமாக தமிழ் மக்கள் மீதான கொடூரமிக்கத் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

எமது பதில் நடவடிக்கை

(5ம் பக்கம் பார்க்க)

# தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரி

## ஐரோப்பிய நாடாளுமன்றின் முன் ஆர்ப்பாட்டம்

(பாரிஸ்)

பிரான்சிலுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முன் ஐரோப்பாவெங்குமிருந்து வந்த தமிழ் மக்கள் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தினர்.

பல்வேறு நாடுகளில் கிளைகளை கொண்டதும் லண்டனை தலைமையகத்தை கொண்டதுமான அனைத்துலக தமிழர் ஒன்றியம் இப்பேரணியை ஒழுங்கு செய்திருந்தது.

தமிழ் ஈழ போராட்டத்தையும், தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையையும் ஐரோப்பிய நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டுமென்று கோரியும்,

சிறிலங்கா அரசாங்கம் நடத்தும் போர் நடவடிக்கைகளை உடனடி

(6ம் பக்கம் பார்க்க)

# ★ வலி-கிழக்கில் நேற்று முன்தினம் இரவு

# புலிகளின் எதிர்த் தாக்குதலில்

# 29 இராணுவத்தினர் உயிரிழப்பு

## - 51 படையினர் படுகாயம் -

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் கிழக்குப் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவத்தினரை தடுத்து நிறுத்த விடுதலைப்புலிகள் நேற்று முன்தினமிரவு மேற்கொண்ட கடும் எதிர்த்தாக்குதலில் இரண்டு அதிகாரிகள் உட்பட 29 இராணுவத்தினர் பலியானார்கள், நான்கு அதிகாரிகள் உட்பட 51 படையினர் படுகாயமடைந்தனர்.**

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கடும் மோதல் குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இராணுவத்தினரின் இழப்பு குறித்து இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உண்மையான இழப்பு இதைவிட அதிகமானதாக இருக்குமெனவே கருதப்படுகின்றது.

அச்செழுப் பகுதியிலிருந்து நீர்வேலி நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பத்துமணி நேரத்திற்கு மேல் கடும் மோதல் நடை

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் முன்னேற்ற முயற்சியில் நேற்று ஈடுபடவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று வலிகாமம் பகுதியில் இராணுவத்தினர் முன்னேற்ற முயற்சி எதிலும் ஈடுபடவில்லை.

நேற்றிரவு புலிகளின் குரல் ஒலிபரப்பு இதனை உறுதிப்படுத்தியது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்றிரவு வரை சிறு, சிறு மோதல்கள் மட்டுமே இடம் பெற்றன. எ

## மொனராகலை காட்டுப்பகுதியில் 19 சிங்களவர் கொலை

(கொழும்பு)

நேற்றுக்காலை மொனராகலை மாவட்டத்தில் காட்டுப்பகுதியில் சிங்கள குடியேற்றவாசிகள் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் 19 பேர் மரணமானதாக அகில இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டோரின் தொகை மேலும் அதிகமாக இருக்கலாமெனவும் பலர் காயமடைந்திருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(6ம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதியில் நேற்று மாலை

# மக்கள் குடியிருப்புக்கள் மீது

# புக்காரா, சுப்பசொனிக் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

புக்காரா மற்றும் சுப்பசொனிக் குண்டு வீச்சு விமானங்கள், நேற்று தீபாவளித் தினத்தன்று மாலை வலிகாமத்தில் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று பிற்பகல் 4.00மணியளவில் யாழ் குடா வான்பரப்பில் திடீரெனத் தோன்றிய புக்காரா விமானம் ஒன்றும், அதனைத் தொடர்ந்து வந்த சுப்பசொனிக் விமானம் ஒன்றும் இத்தாக்குதல்களை மேற்கொண்டன.

குடா வான்பரப்பில் பேரிரைச்சலுடன் வட்டமிட்ட சுப்பசோனிக் விமானத்தினால் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

59-170-எ

## வெற்றுக் கண்ணால் கிரகணத்தை பார்ப்பது ஆபத்தானது

[யாழ்ப்பாணம்]

இன்று ஏற்படவுள்ள சூரிய கிரகணத்தை வெற்றுக்கண்களால் பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ். சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இச்சூரிய கிரகணத்தை அது முழுமையான கிரகண மாயல்லாது பகுதியாக இருந்தாலும் கூட பார்க்க முனைவது அபாய

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L, A/L பழைய வினாத்தாள்கள் (Tutes) 50 வீதம் தள்ளுபடி விலையில் விற்பனையாகின்றன. BOND யாழ்ப்பாணம். (ஏ-5382)

### அறிவித்தல்

இறைச்சிக் கோழி, முட்டை மற்றும் செவ்விள நீர் கன்றுகள் வழமை போல் மருதனார் மடத்தில் உள்ள அண்ணா பண்ணையில் பெற்றுக் கொள்ளலாம். ஏ-5416

### விஷேச அன்ரனா

ரூபவாஹினி, மட்ரூஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும் வீடியோ கமரா, ரி. வி. டெக். றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் வீனஸ், டிலக்ஸ் வாச் அன் றேடியோ வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி: Our Qualified Experienced Technical & Tutorial Staff T Thanabalasingam B Sc. (Ceylon) Dip-in Electornic Engineering (Lond (Specialist in V. C. R. Service) (ஏ-5388)

# அச்செழுவில் அழிக்கப்பட்ட டாங்கிகள் புகைத்தவண்ணமுள்ளன

(யாழ்ப்பாணம்)

அச்செழுப் பகுதியில் விடுதலைப் புலிகளால் தகர்த்தழிக்கப்பட்ட டாங்கிகள் புகைத்த வண்ணமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்செழுப்பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளால் ஆறு டாங்கிகள் தகர்க்கப்பட்டன. இவற்றில் 3 முற்றாக எரிந்து நாசமாகின. மற்றைய மூன்றும் பலத்த சேதமடைந்தது.

இவற்றிலிருந்தே புகை கிளம்பிய வண்ணமிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் உக்கிர தாக்குதலில் வலிகாமத்தில் கடந்த 7 நாட்களில் பத்து வரையிலான டாங்கிகள் அழிக்கப்பட்டும், பலத்த சேதமாக்கப்பட்டுமுள்ளன.

முன்னேற முயலும் படையினருக்கு கவசமாக வரும் டாங்கிகளே தகர்த்தழிக்கப்படுகின்றன. -தி

# கொழும்பு நகரின் பாதுகாப்பு இரட்டிப்பாக அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய் குதங்கள் பலத்த பாதுகாப்பின் மத்தியிலும் தகர்க்கப்பட்டதையடுத்தே நகரின் பாதுகாப்பு மறுசீரமைக்கப்பட்டு இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலால் ஏற்கனவே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்த கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் முக்கிய பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டு எங்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பொலிசாருடன் இணைந்து முப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு அரசு பொதுமக்களின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளது. பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பவர்களுக்கு எதிராகச் செயற்படுமாறும் பொலிசார் பொதுமக்களை கேட்டுள்ளனர். -சி

# வெளிநாடுகளின் உதவியுடன் எண்ணைக் குதங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

வெடிவைத்து தகர்க்கப்பட்ட எண்ணைக்குதங்களை புனரமைக்கும் பணி வெளிநாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர் அமரானந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளால் அரசு எதிர் கொண்ட மிகப்பெரும் இழப்பு இதுவென்று அவர் தெரிவித்துள்ளார்.

பல கோடி ரூபா சேதமேற்பட்டுள்ள இந்த அனர்த்தத்தை ஈடுசெய்வதானால் வெளிநாடுகளிலிருந்து உதவி பெற்றே இதனை புனரமைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எண்ணைக் குதங்களை புனரமைப்பது குறித்து அரசு மிகவிரைவில் வெளிநாட்டு உதவியை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. வின் 50 வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா இந்த உதவியை வெளிநாட்டு தலைவர்களிடம் கோருவார் என எதிர் பார்க்கப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன. -தி

## மண்ணெண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு தலா மூன்று லீற்றர் மண்ணெண்ணை விநியோகிக்கப்பட்டது.

லீற்றர் 25 ரூபா விலையில் இந்த மண்ணெண்ணை சகல ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. -72

## விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கே. கே. எஸ் வீதி மனோகராதியட்டர் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10-30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இளம் பெண் ஒருவர் மரணமானார்.

யாழ்ப்பாணம் ஐந்துசந்தியைச்சேர்ந்த ச கோகிலா (வயது 13) என்ற இளம் பெண்ணே மரணமானவராவார். 170-எ

## யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயிலும், உடுவிலிலும் இயங்கி வந்த கோப்பாய் கல்விக் கோட்ட அலுவலகமும் உடுவில் கல்விக்கோட்ட அலுவலகமும் தற்போது யாழ். கல்வி வலயம் 1 ன் சில கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

ஏற்கனவே மானிப்பாயில் இயங்கி வந்த தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களும் இடம்பெயர்ந்து இங்கு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 95

## தேசிய பாதுகாப்பு நிதி கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை/உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மக்கள், இதுவரை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளித்திருந்தவர்கள் நாளை 25ந் திகதி மு. ப. 9-00 மணி முதல் பி. ப. 4-00 மணி வரை தங்கள் தேசிய பாதுகாப்பு நிதியைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இடம் பெயர்ந்த, ஒப்புதலளித்த அனைத்து மக்களும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உடுவில் தென் மேற்கு, உடுவில் தென் கிழக்கு, உடுவில் மத்தி, உடுவில் வட மத்தி, உடுவில் வடக்கு, சங்குவேலி, இணுவில் தென்மேற்கு, இணுவில் கிழக்கு, இணுவில் மேற்கு, இணுவில் தெற்கு, தாவடி கிழக்கு, தாவடி தெற்கு, தாவடி வடக்கு, சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் மத்தி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் மேற்கு, கந்தரோடை, ஏழாலைமேற்கு, ஏழாலை தென்மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள் செலுத்தலாம். -தி

## பொதுவிடுமுறைதினங்கள் 1996

1996ம் ஆண்டில் பின்வரும் நாட்கள் மட்டுமே தமிழீழப் பொது விடுமுறை தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை நாட்காட்டி அச்சிடும் சகலரும் கவனத்திற் கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

| விபரம் | திகதி | கிழமை |
|---|---|---|
| 01. தைப்பொங்கல் | 15-01-1996 | திங்கள் |
| 02 மகாசிவராத்திரி | 17-02-1996 | சனி |
| 03. றம்ழான் | 21-02-1996 | புதன் |
| 04. பெரியவெள்ளி | 05-04-1996 | வெள்ளி |
| 05. சித்திரைப் புத்தாண்டு | 13-04-1996 | சனி |
| 06. அன்னை பூபதி நினைவு நாள் | 19-04-1996 | வெள்ளி |
| 07. ஹஜ் பெருநாள் | 29-04-1996 | திங்கள் |
| 08. மே நாள் | 01-05-1996 | புதன் |
| 09. சித்திரா பௌர்ணமி | 03-05-1996 | வெள்ளி |
| 10. சிறப்பு வைப்பக விடுமுறை | 30-06-1996 | ஞாயிறு |
| 11. கரும்புலிகள் நாள் | 05-07-1996 | வெள்ளி |
| 12. ஆடி அமாவாசை | 13-08-1996 | செவ்வாய் |
| 13. தியாகி திலீபன் நினைவுநாள் | 26-09-1996 | வியாழன் |
| 14. மாலதி நினைவு நாளும், தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமும் | 10-10-1996 | வியாழன் |
| 15. தீபாவளி | 10-11-1996 | ஞாயிறு |
| 16 மாவீரர் நாள் | 27-11-1996 | புதன் |
| 17. நத்தார் | 25-12-1996 | புதன் |
| 18 சிறப்பு வைப்பக விடுமுறை | 31-12-1996 | செவ்வாய் |

## சைவ நெறித் தேர்வு 9 மாணவர்களுக்கு தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

சைவநெறி தேர்வுப் பரீட்சையில் தோற்றிச் சிறப்புச் சித்தி பெற்ற ஒன்பது மாணவர்கள் தங்கப் பதக்கத்தை முதற் பரிசாக பெற்றுக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அகில இலங்கை ரீதியாக நடத்திய 1994 ம் ஆண்டுக்கான சைவ நெறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

சபைத் தலைவர் இ. ம. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்ட ஒன்பது மாணவர்களின் விபரம் வருமாறு:- கொழும்புத்துறை இ ம வித்தியாலயத்தை சேர்ந்த ஆண்டு மூன்று மாணவன் செல்வன் வ. நிருபன் கொக்குவில் இ. ஆ. பாடசாலை நாலாம் ஆண்டு மாணவி செல்வி ஜெ அபிராமி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஐந்தாம் ஆண்டு மாணவி செல்வி ஸ்ரீமகள் ஸ்ரீரங்கநாதன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆறும் ஆண்டு மாணவி செல்வி காயத்திரி பாலச்சந்திரன், வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை ஏழாம் ஆண்டு மாணவி செல்வி சைலஜா குகதாசசர்மா, யாழ் இந்து மகளிர் கல்லூரி எட்டாம் ஆண்டு மாணவி செல்வி அனிஷா சிவபாதசிங்கம், யாழ் பரியோவான் கல்லூரி ஒன்பதாம் ஆண்டு மாணவன் செல்வன் செ. தர்மசீலன், யாழ் இந்துக்கல்லூரி பத்தாம் ஆண்டு மாணவன் செல்வன் த. காந்தநேசன். யாழ்ப்பாணக்கல்லூரி பதினொராம் ஆண்டு மாணவி செல்வி சுதர்சனா மகேந்திரன். -162

## தடுப்பூசி தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில், மத்திய மருந்தகங்களில் விசர்நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்துக்கு தற்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 154

## 50வது ஆண்டு நிறைவு விழா

(கொழும்புத்துறை)

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும் புற்றுளை சனசமூகநிலையத்தினதும் 50வது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் புற்றுளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. -154

## சமாசம் அமைக்க ஏற்பாடு

(நாவலடி)

வடமாகாணத்திலுள்ள அனைத்து கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள், சங்கங்கள் அனைத்தையும் இணைத்து வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை வடமாகாணம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் மேற்கொண்டு வருகிறது. -163

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் தோட்டம், அரியாலை, பூம்புகார், வசந்தபுரம், துண்டி, எழிலூர், வழன்புரம், மகேந்திரபுரம், பாஷையூர் ஆகிய பகுதிகளில் தினசரி கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் மீண்டும் அதிகரித்துள்ளன. 154

## அலுவலகம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் காரியாலயம் தற்போது உடுவில் பெரியமதவடிக்கு அண்மையிலுள்ள கட்டிடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கான தடுப்பூசி போடுதல், கோழிகளுக்கான நோய்த்தடுப்பூசிகளை போடலாமெனக் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ஞா. சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். -154

## கந்தசஷ்டி திருவிழா

(கொழும்புத்துறை)

முருகன், வள்ளி தெய்வானை விக்கிரகம் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் இன்று 24ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கந்தசஷ்டி விழா ஆரம்பமாகித் தொடர்ந்து ஆறு தினங்கள் விஷேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

சூரன்போர் திருவிழா எதிர்வரும் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறும்.

சில ஆலயங்களில் கந்தபுராண படலம் வாசித்தலும் பயன் சொல்லலும் நடைபெறும். 154

### மணிவாக்கு

தூய்மையானவர்கள், மாசற்றவர்கள் இம்மையிலேயே கடவுளைக் காண்கிறார்கள்.

—சுவாமி விவேகானந்தர்

## நமதுநோக்கு

### அரசு மீது கண்டனம்

யாழ். குடா மீதான தாக்குதலை அனுருத்த ரத்வத்தையின் சொற்படி ஜனாதிபதி சந்திரிகா போர் வெறியுடன் தீவிரப்படுத்தியுள்ளதுதான் சிங்களப் பகுதிகளில் ஏற்படும் அனர்த்தங்களுக்குக் காரணம் என்று தென் இலங்கையில் கண்டனக் குரல்கள் எழத் தொடங்கிவிட்டது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு சாதுரியமான வகையில் முகம் கொடுக்கக்கூடிய ஆற்றலும் திறமையும் அரசாங்கத்திடம் இல்லை என்பதையே இப்போது நடக்கும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றதென்று ''ராவய'' பத்திரிகையின் ஆசிரியர் கூறுகிறார். அவர் மேலும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எவ்வளவு படையினர் தேவை, எவ்வகையான ஆயுதங்கள் தேவை என்பதை மட்டுமே அரசாங்கமும் படையினரும் எந்த நேரமும் சிந்தித்தனர்: மறுபுறமாகச் சிந்திக்கத் தவறிவிட்டனர் என்றும் கூறியுள்ளார், அத்துடன் நாம் யாழ்ப்பாணத்தின் மீது போர் தொடுத்தால் அவர்கள் கொழும்பில் பொருளாதார இலக்குகளை தாக்குவார்கள் என்றும் சிந்திக்க அரசு தவறிவிட்டது என்றும் அவ்வாசிரியர் குறைகூறியுள்ளார்.

வட பகுதியில் நடக்கும் யுத்தத்தின் பிரதிபலிப்பே இன்று தென்பகுதியில் நடைபெற்ற பதில் தாக்குதல் என்றும் யுத்தம் நேற்றுவரை வேறு பகுதியில் நடைபெற்றது: ஆனால் இன்று எமது முற்றத்தில் யுத்தம் நடைபெறுகிறது என்றும் இதற்கு அரசியல் தீர்வே முக்கியமானதென்று தான் வலியுறுத்துவதாகவும் நாடாளுமன்ற அங்கத்தவர் வாசுதேவ நாணயக்காரா பி.பி.ஸிக்கு அளித்த செவ்வியில் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு இன்று பாரிய அச்சுறுத்தலுக்கும் பதற்றத்துக்கும் உட்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிகா ஐ. நா மாநாட்டில் பங்குபற்றச் சென்றுள்ளது அவர் தனது பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதையே காட்டிக்காட்டுகிறது என்று கண்டனம் தெரிவித்துள்ளார். இதில் உள்ள முக்கிய விடயமென்னவென்றால் கொலன்னாவ எரிபொருள் களஞ்சியக் குதங்கள் எரிப்புக்குள்ளாக்கப்பட்டபின்னரே சந்திரிகா நாட்டைவிட்டுச் சென்றுள்ளமையாகும். ரோமாபுரி எரியும்வேளையில் நீரோ மன்னன் பிடில் வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தது போல்தான் சந்திரிகாவின் பயணமும் இருக்கிறது. பிரச்சினைகள் பெருகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டை விட்டுச் சென்று ஓய்வெடுக்க சந்திரிகா யோசித்துமிருக்கலாம். சிறிலங்காவின் இன்றைய நிலையை லண்டன் பி.பி.ஸியின் சிங்கள சேவை செய்தி ஆசிரியர் மிகவும் சிறப்பாக விபரித்துள்ளார். சூறாவளிக்கு இடையே செல்லும் பாய்மரக்கப்பல் போலவே சிறிலங்கா இருப்பதாக அவர் வர்ணித்துள்ளதோடு சூறாவளியில் சிக்கிப் போயுள்ள பாய்மரக் கப்பல் மூழ்குமா? அன்றித் திசைமாறுமா? அல்லது சீராக தனது இலக்கை நோக்கிச் செல்லுமா என்பதை தீர்மானிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும் அவர் கூறியுள்ளார்.

கொலன்னாவ எண்ணெய்க் குதங்கள் மீதான குண்டு வெடிப்புக்கள் சிறிலங்காவின் பொருளாதாரத்தைப் பாரிய அளவில் பாதித்துள்ளது. அரசாங்கம் மறுத்தாலும் ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆரம்பமாக இருக்கும்வேளையில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்திருப்பதால் அவர்கள் தமது பயணத்தை நிறுத்துவர் அல்லது வேறு நாடுகளுக்குச் செல்வர். இதனால் அந்நியச் செலாவணி பிரச்சினை மேலும் அதிகரிக்கும்; அதுவுமல்லாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிலங்காவில் முதலீடு செய்வதற்கும் அச்சமடைவர். இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக சிறிலங்காவின் பொருளாதாரத்தை பெரும் பாதிப்புக்குள்ளாக்கும்.

அத்துடன் யுத்தத்தை அரசுதீவிரப்படுத்தி அதற்கு முன்னிடம் கொடுப்பதால் யுத்தச் செலவு மேலும் அதிகரிக்கும். இதை பாதுகாப்பு செலவீனங்களுக்காக மேலும் 860 கோடி ரூபா குறை நிரப்புப் பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்டமை எடுத்துக்காட்டுகிறது; இந்த குறை நிரப்புப் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஒரு வேடிக்கையான கருத்தையும் முன்வைத்துள்ளார். அதாவது இந்த யுத்தம் பயங்கரவாதத்துக்கு எதிரானதே ஒழிய தமிழர்களுக்கு எதிரானதல்ல என்று கூறியுள்ளார்; இங்கே நடப்பதோ வேறு விடுதலைப்புலிகள் சிங்களப் படையினரைக் கொல்லுகிறார்கள். ஆனால் சிங்களப் படை தமிழ் மக்களைக் கொன்று குவித்து இடம்பெயரச் செய்கிறது.

# கொழும்பில் கடந்த சில தினங்களில் 500க்கும் மேல் தமிழர் கைது

(புதுடில்லி)

கொழும்பிலும் அதன்சுற்றுப் புறங்களிலும் கடந்த சில தினங்களில் 500 க்கும் மேற்பட்ட தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலன்னாவை, உறுகொடவத்த எண்ணெய் குதங்கள் மீது துப்பாக்கி நபர்கள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து இடம்பெற்றுவரும் சுற்றி வளைப்பில் கடந்த ஞாயிறு வரை 500 க்கும் மேற்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பின் பல பகுதிகளையும் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தி வரும் முப்படையினருமே இவர்களைக் கைது செய்து தடுத்து வைத்து விசாரணைகளை நடாத்தி வருவதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் பெருமளவினர் இளைஞர், யுவதிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காலை, மாலை, இரவு எனப் பாராது படையினர் சுற்றி வளைப்பிலும் கைதிலும் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -இ

# மலையக தமிழ் சகோதரர்களே கொழும்பில் அடித்துக் கொலை

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சனிக்கிழமை மலையகத்தை சேர்ந்த இரு தமிழ் சகோதரர்களே சிங்களக் காடையர்களால் அடித்துக் கொல்லப்பட்டவர்களாவர்.

வனாத்துமுல்லைப் பகுதியில் சைக்கிள் ஒன்றில் வந்து கொண்டிருந்த மலையகத்தைச் சேர்ந்த சகோதரர் இருவரை வழிமறித்த சிங்களக்காடையர்கள் பொல்லுகள், தடிகள் மற்றும் கூரிய ஆயுதங்களால் அடித்து கொலை செய்துள்ளனர்.

இப்பகுதியில் வதந்தியைப் பரப்பிய சிங்களக்காடையர்கள் இவ்விருவரையும் படுகொலை செய்துள்ளனர். இந்த வேளை அங்கு வந்த பொலிஸார் வானை நோக்கிச் சுட்டு கூட்டத்தை கலைத்ததுடன் உடனடியாக அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தியதால் வேறு அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -இ

# எண்ணெக்குத இழப்புகளை மதிப்பிட வெளிநாட்டு குழு வருகிறது

(கொழும்பு)

கொலன்னாவை, உறுகொடவத்த எண்ணெய் குதங்களில் ஏற்பட்ட இழப்பீடுகளை மதிப்பீடு செய்ய வெளிநாட்டு காப்புறுதி நிபுணர்கள் குழு இவ்வாரம் கொழும்புவரவுள்ளது.

ஜேர்மனி, சுவிஸ், லண்டனிலுள்ள முன்னணி வாய்ந்த மூன்று காப்புறுதி முகவர்களிடம் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் அதன் பொறுப்புகளை மீள் காப்புறுதி செய்துள்ளதால் நஷ்ட ஈட்டு வழங்கல் நடவடிக்கையில் கூட்டுத்தாபனத்திற்கு எதுவித கஷ்டமும் இருக்கமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு எண்ணெக்குதங்களிலும் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும் வெளிநாட்டு குழு விரைவில் தனது பணிகளை பூர்த்திசெய்யும். இந்தக்குழுக்கள் கணிப்பிடும் அளவுக்கேற்ப பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு நஷ்ட ஈடு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. -இ

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 24ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாட்டுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

## இராசி பலன்

24-10-1995

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு ஐப்பசி 07]

அமாவாசை மு. ப. 10-45 வரை, சித்திரை மு. ப. 11-30 வரை, சித்தயோகம், இராகு காலம் மாலை 3-02 முதல் 5-32 வரை, சுபவேளை, 10-32 முதல் 12-02 வரை.

மேஷம்: தன்னம்பிக்கை, திருப்தியான போக்கு, தொழில் வளர்ச்சி.

இடபம்: சுபகாரிய முயற்சி, பெண்களால் செலவு, பயணம்.

மிதுனம்: தொழில்குழப்பம், மனச்சுமை, அலைச்சல்.

கடகம்: சகோதர சஞ்சலம், அவதூறு, பணமுடை.

சிங்கம்: மேலதிகாரிகள் பாராட்டு, புதிய சிந்தனை, குடும்ப சுகம்.

கன்னி: முயற்சித் தடை, கடின வாக்கு, வேதனை.

துலாம்: தொழில் லாபம், பிறர்க்கு உதவுதல், கல்வியால் பெருமை.

விருச்சிகம்: கருத்துமோதல், சகிப்புத்தன்மை, தெய்வ தரிசனம்.

தனுசு: விரோதிகளை ஜெயித்தல், வினோத சிந்தனை, வேலைப்பளு.

மகரம்: கடன் விரோதம், காரிய தாமதம், குடும்ப வேற்றுமை.

கும்பம்: உற்சாகமின்மை, அகால உணவு, யோசனை.

மீனம், பய உணர்வு, கெட்ட சகுனம், தன்நிலை இழப்பு.

— ஜோஸ்யர்

## தாழ்வினி வராது தமிழனே எழுந்துவா!

ஏனினி உறக்கம்!
இம்மண்
எங்கணும் விடிவின் கோலம்
கூனனும் நிமிர்ந்து
வேங்கைக் குருளையாய்த் தாவுங்காலம்
தாழ்வினி வாராதென்றே
தமிழனே எழுந்து வாடா!

போரிடும் களத்தில் எங்கும்
புறந்தரும் மாற்றார் கூட்டம்
காரிருள் கலைந்து
வெய்யோன் கதிரொளி பரவுங்காலம்
தாழ்வினி வாராதென்றே
தமிழனே எழுந்து வாடா!

பிஞ்சுகள், பெண்கள்
களத்தில் பெருந்திறன் விளக்குங்காலம்
அஞ்சுதல் எவர்க்கும் இல்லை
அழிந்தது இங்கே தொல்லை
நெஞ்சினை நிமிர்த்திக் கொண்டே
நீ தமிழ் மகனே வாடா!

தேசத்தின் விடிவுக்காக
தீயையும்
விழுங்கிச் சாகும்
பாசத்தை வளர்த்த வீரர்
படைத்துள புதுமை கண்டாய்.........
நேசத்தை விடிவில் கொண்டே
நீ தமிழ் மகனே வாடா!

நிலா தமிழின்தாசன்

கற்பகசோலை
பொருண்மியத்தில்
புதிய பாதை

# ஐ. நாவில் தமிழீழத்தின் குரல் ஒலித்தமை ஒரு வரலாற்றுச் சாதனை

"அவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களே" என்று விழித்தே அவர் தம் உரையை தொடங்கி இருந்தார். அந்த அவையைப் பொறுத்தவரை இவ்வாறு உரை ஆரம்பிப்பது வழக்கமில்லை.

ஆயினும் வழக்கத்திற்கு மாறாக உரையின் சுருக்கமான ஆரம்பம் பொதுப்படையாகவே பெரிதுபடுத்தப்படாது அசட்டை செய்யப்பட்டிருந்தது ஸ்ரீ லங்கா நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் அசாதாரணமான ஏதாவதொன்றுக்கு வழிகோலப் போகிறார் என்று ஐயப்படுவதற்கு ஆதற்கான முன்நிகழ்வுகள் ஒன்றும் அங்கு இருந்திருக்கவில்லை.

"தமிழீழம் போன்று ஒடுக்கப்படும் சிறுபான்மை தேசிய இனங்கள் இந்த மிக உயர்ந்த அவையில் முறையீடு செய்ய இயலாது எனில் அப்பொழுது நாம் எங்குதான் செல்வதோ? ஒரே ஒரு நிமிடம் மட்டும் பேசுவதற்கு என்னை தயவு கூர்ந்து அனுமதியுங்கள்".

தமிழீழமா? ஐ. நா. சபையில் அந்த நாடு எப்பொழுது அனுமதிக்கப்பட்டது? அவைத் தலைவரின் முகபாவம் வினாக்குறியான தோற்றத்தையே வெளிப்படுத்திற்று. பேராளர் வரிசைகளினூடே பரபரப்பான ஒரு முணுமுணுப்பு வியாபித்தது.

"ஸ்ரீ லங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்டதாக துலங்கும் 2 1/2 மில்லியன் பலம் வாய்ந்த தமிழீழ தேசிய இனத்தை சேர்ந்தவன் யான் ஸ்ரீ லங்கா அரசோ ஓர் இனவொழிப்பு கொள்கையையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது..."

இக்கட்டத்தில் ஒலிவாங்கித் தொடர்பு அறும்படி துண்டிக்கும் ஓர் ஆணியை ஒரு உத்தியோகஸ்தர் வெகு சாமர்த்தியமாக திருகிவிட்டார். பேசுபவர் ஸ்ரீலங்காவின் வெளிநாட்டமைச்சராக இருப்பாரேல், கண்டிப்பாகவே இவருக்கும் பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டுமென்று ஐ. நா. அங்கத்தவர்கள் எண்ணியிருப்பார்கள்.

ஆயினும், ஐ. நா. பொதுச் சபையினது சபைமண்டபத்தினது தொலைமூலைகளிலிருந்து பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மேடையை நெருங்குவதற்கு விரைந்துகொண்டிருந்த இடைவேளைக்குள்ளாக இவ்வுரையை தொடங்கிய பரிஸ்டர் வைகுந்தவாசன் தமது உரையைத் தொடர்ந்தும் நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

"புறம்பான ஒரு தேசிய இனமாக வாழ எங்கள் சுயநிர்ணய உரிமையை நாம் பிரயோகித்து விட்டோம். இந்தியப் பிராந்தியத்தின் அமைதி நிலையைத் தமிழர் பிரச்சினை அச்சுறுத்தும் ஒவ்வோர் ஆபத்தும் மிகுந்தே காணப்படுகின்றது. உலகத் தலைவர்களாகிய தாங்கள் தலையீடுசெய்து அதன் தீர்வுக்கு இப்போதே உதவினாலன்றி பாலஸ்தீனிய மற்றும் சைப்ரஸ் பிரச்சினைகளைப் போன்றே அலட்சியப்படுத்த இயலாத பாரிய பிரச்சினையாக ஸ்ரீலங்காவில் இருக்கும் பிரச்சினையும் விருத்தியடையும்."

## சா. ஆ. தருமரத்தினம்

இக்கட்டத்தில் மேடையை நோக்கிவந்த காவலர்கள் அவரை மேடைக்கு அப்பால் தள்ளிக்கொண்டே சென்றிருந்தனர்.

ஏறத்தாழ 150 நாடுகளின் பேராளர்கள் 1978 அக்டோபர் திங்கள் 5ம் நாள் மதியத்தை அண்மித்துக்கொண்டிருந்த அவ்வேளைக்கு சற்று முன்பாகத்தான் சைப்ரஸ் நாட்டு ஜனாதிபதியின் ஒருமணி நேர உரையையும், பொறுமையுடன் செவிமடுத்திருந்தனர். இப்பொழுது ஸ்ரீலங்கா நாட்டின் வெளிநாட்டமைச்சர் தமது உரையை மட்டும் நிறைவு செய்பவராக இருந்தால் பேராளர்கள் நண்பகல் உணவிற்காக அவையை ஒத்திவைக்க கூடியதாக இருக்கும்.

தமதுவேளை வரும்வரை பதட்டமின்றி பொறுமையுடன் காத்திருந்த வைகுந்தவாசன் ஸ்ரீலங்கா நாட்டின் வெளிநாட்டமைச்சர் சாகுல் ஹமீத் அவர்களை போன்று ஆள் மாறாட்டம் புரிந்து ஒரு வரலாற்றுச் சாதனையாக அம்மன்றத்தில் தமிழீழத்தின் குரலை ஓங்கி ஒலித்திருந்தார்.

இதற்குப் பின்னர் 1983ம் ஆண்டில் ஐ. நா. பொதுச் சபையில் வருடாந்த கூட்டங்களில் ராஜாங்கத் தலைவராக கலந்துகொண்ட மொறிஸியஸ் பிரதமர் ஜகநாத் தமது உரையின் போது இலங்கைத் தமிழ் மக்களின் அவல நிலையை அங்கு பிரஸ்தாபித்திருந்தார்.

மனிதாபிமானம் காரணமாக மொறிஸியஸ் பிரதமர் ஜகநாத் ஐ நா. பொதுச்சபையில் அவ்வாறு உரை நிகழ்த்துவதற்கு முன்பாக, எரியூட்டப்பட்ட யாழ். பொது நூலகத்தினை மீளவித்து புதுப்பிப்பதற்கு அவர்களது அன்பளிப்பாக யாழ். மாநகர முதல்வரிடம் சேர்க்கும்படி அங்குள்ள தமிழ்க் கோவில்களின் கூட்டவையின் செயலாளர் முத்தையாவிடம் அமெரிக்க நாணயத்தில் 1000 டாலர்களை கையளித்திருந்தார். மேற்படி அன்பளிப்பை இங்கு தபால் மூலம் அனுப்பிவைத்த போது 1983 யூலை இனப்படுகொலைகள் குறித்து துயரம் தெரிவித்திருந்த முத்தையன் நியூயோர்க்கிலுள்ள தமது நாட்டின் நிரந்தரப்பிரதிநிதிமூலம் தமிழர் பிரச்சினையை ஐ நா. பொதுச்சபையில் பிரஸ்தாபிப்பதற்கு தாம் முயன்று வருவதாக தகவல் தெரிவித்திருந்தார். ராஜாங்க தலைவரான மொறிஸியஸ் பிரதமரே அவ்வாறு செய்வார் என்று இங்கு யாரும் கற்பனைகூட செய்ததில்லை. ஆயினும் எதிர்பாராதவாறு அங்ஙனம் பிரஸ்தாபித்திருந்தார் பிரதமர் ஜகநாத். 1983 ஜூலைக்குபின் இம் மேற்படி பொதுச்சபைக் கூட்டங்களில் கலந்துகொண்ட இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்தவரான தமிழக அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து ஐ. நா. பொதுச்சபையில் பிரஸ்தாபித்திருந்தாராகிலும் அதன் குழுநிலை விவாதங்களிலேயே அவரால் அவ்வாறு செய்ய முடிந்தது. மொறிஷியஸ் பிரதமர் ஜகநாத் அதனை ஐ. நா. பொதுச் சபைக் கூட்டங்களிலேயே சாதிக்கின்றார் ஒரு முன்னோடியாக.

அதற்கு மேல் 1986 நவம்பர் திங்களில் ஜெனீவாவில் கூடிய ஐ. நா. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட மாநாட்டில் இலங்கை தமிழர் விவகாரம் குறித்து ஒரு தீர்மானத்தையே முன்மொழிந்திருந்தது ஆர்ஜன்ரீனா நாடு. மேற்படி அவையில் விவாதிக்கப்பட்டு அதன் மீது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் எங்கே அது தனது பூகோள அரசியல் நலனை பேணுவதற்கு இப்பிரச்சினை குந்தகமாக அமைந்து விடுமோ என்று பயந்த இந்தியா ஆர்ஜன்ரீனா மீது தனது செல்வாக்கை பிரயோகித்து அந்நிலை ஏற்படாது தவிர்த்துக் கொண்டது.

போக்லாண்ட் தீவின் உரிமை பற்றி பிரித்தானியாவும், ஆர்ஜன்ரீனாவும் யுத்தம் புரிந்த வேளையில் ஆர்ஜன்ரீனாவிற்கு பாதகமாகவும். பிரித்தானியாவிற்கு சார்பாகவும் ஐ. நா வில் கொண்டு வரப்பட்ட பிரேரணை மீது ஸ்ரீலங்கா பக்கச் சார்பாக நடந்துகொண்டதன் விளைவே ஆர்ஜன்ரீனா தமிழர் மீது அப்போது கரிசனை எடுக்காததற்கு காரணமாக அமைந்தது. ஆயின் அதே நாடுதான் பின்னர் தமிழ் மக்களைப் படுகொலை புரிவதற்காக ஸ்ரீலங்காவுக்கு புக்காரா விமானங்கள் சிலதை விலைக்கு வழங்கவும் செய்திருந்தது.

சமீபத்தில் நாகர்கோவிலில் நடைபெற்ற வான் குண்டு வீச்சால் அப்பாவி மாணவர்கள் கொல்லப்பட்டமைக்காக பாரீஸ் நகரை தலைமையாகக் கொண்ட யுனஸ்கோ நிறுவனம் சார்பில் அதன் பணிப்பாளர் நாயகம் மேற்படி கொடூரத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு இருந்தார்.

மேலும் வடபகுதியில் நிலவும் பொருளாதார; எரிபொருள் தடை குறித்து தற்போது ஐ. நா வின் மற்றொரு அமைப்பான அகதிகள் புனர்வாழ்விற்கான ஐ. நா உயர்ஸ்தானிகராலயம் ஆராய்ந்து வருகின்றது.

ஐ நா சபை அதனது 50ம் ஆண்டு நிறைவு இவ்வாரம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. அதன் வரலாற்றில் முன்னொருபோதுமே நிகழ்ந்திராத ஒரு சாதனையாக ஸ்ரீலங்காவின் வெளிநாட்டு அமைச்சராக ஆள்மாறாட்டம் புரிந்து ஐ. நாவினால் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நாடான தமிழீழத்தின் குரலை தமிழ்ப் பிரசை அங்கு உரக்க ஒலித்துள்ளார்.

எந்த தமிழ் மக்களுக்காக அன்று அவர் குரல் கொடுத்திருந்தாரோ அந்த தமிழ் மக்களின் அபிலாசைகளை நிராகரிப்பதற்காக தனது வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் மூலம் பிறிதொரு ஆள்மாறாட்டத்தை அதே ஐ நா பொதுச் சபையில் நிகழ்த்திக்காட்டி விட்டார்- ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார். அவரது வெளிநாட்டு அமைச்சரோ எவ்வகையிலும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர் அல்ல. அம்மையாரின் நடவடிக்கையை ஆட்சேபிப்பது போன்று அவர் ஐ. நா பொதுச் சபையில் உரை நிகழ்த்தும் வேளையில் ஐ. நா. தலைமைப் பணிமனை முன்பாக அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தவுள்ளனர்.

தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துள்ள இத்தீவின் தமிழ் மக்களது அபிலாசைகளையும், அதன் இறைமையையும் மீளவித்துக் கொண்டுள்ள தமிழீழத்தையும் அதனது பொன் விழா வாண்டில் ஐ. நா. அங்கீகரிக்குமா? அதன் உறுப்பு நாடுகள் அதற்காக முயலவேண்டும். செய்வார்களா?

## முதன்மை ஆசிரியர் வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயம் 1 கல்வித் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள முதன்மை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தரம் 2:2, 2:01 வகையைச் சேர்ந்த வலயம் 1 ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை கோட்டக் கல்விப்பணிமனைகளில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வடக்கே தபால்களை அனுப்ப உடன் நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சர் சமரவீரவிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தபால்கள் தாமதமாக யாழ்ப்பாண மக்களுக்கு விநியோகிக்கப்படுவதால் அவர்களுக்கு ஏற்படும் துன்பதுயரங்களை நீக்கதாங்கள் தலையிட்டு ஆவன செய்யுமாறு யாழ். மாவட்ட அரச, தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கம் தபால், தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீராவுக்கு அண்மையில் அனுப்பிய வேண்டுகோளொன்றில் தெரிவித்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தனிமனிதர்களுக்கு வரும் கடிதங்களை சர்வதேச தபால் சட்ட திட்டங்களுக்கு அமைய பாதுகாப்பாக வழங்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது. சந்தேகம் ஏதும் இருப்பின் விலாசதாரரின் முன்னிலையில் வைத்தே கடிதம் திறக்கப்படலாம். இதை விடுத்து அவர்களுக்கு அறியாமல் பாதுகாப்புப் படையினர் மற்றவர்களுடைய கடிதங்களைப் பிரித்துப் பார்த்தல் நீதிக்குப் புறம்பானதாகும்.

சாதாரண கடிதங்களைத் தானும் அனுப்புவதற்கு யாழ்ப்பாண தபால் நிலையங்களில் முத்திரைகள் கிடையாது. இந்த மாத முற்பகுதியில் கொழும்பில் தேங்கியிருந்த 1200 தபால் பொதிகளில் அறுபது பொதிகள் மாத்திரமே உணவுக் கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மிகுதித் தபால்களும் சோதனையின் பின்பே அனுப்பி வைக்கப்படும் எனவும் அதற்குப் போதிய ஆட்கள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தங்கள் உறவினர்களின் சுகதுக்கம் பற்றி விசாரிக்க வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியையே நாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

162- சி

# எல்லைக்கிராம பாதுகாப்பு: தெற்கில் விழிப்புக் குழு

(கொழும்பு)

தெற்கிலும், வடக்கு-கிழக்கு எல்லைப் பகுதியிலும் கிராமங்களை பாதுகாக்க விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு எல்லைக் கிராமங்கள் மூன்றில் கடந்த சனிக்கிழமை 72 சிங்களவர் வெட்டிக் கொல்லப்பட்டதை அடுத்தே அரசு உடனடியாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்காக கிராமங்கள் தோறும் சிங்கள இளைஞர்கள் விரைவில் திரட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விழிப்புக் குழுக்கள் இரவு, பகலாக கடமையாற்றுமெனவும் இவர்களுக்கு படையினர் உதவி வழங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை/உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இதுவரை காலமும் பாதுகாப்பு நிதி ஒப்புதல் பெறுதவர்களும் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளாதவர்களும் இன்று 24 ம் திகதி காலை 8-00 மணி தொடக்கம் பி. ப. 5-00மணி வரை இணுவில் மத்திய கல்லூரியில் சந்திக்கவுள்ளதால் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்டுகின்றனர்.

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர்பிரிவைச்சேர்ந்த இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உடுவில் தென் மேற்கு உடுவில் தென்கிழக்கு, உடுவில் மத்தி, உடுவில் வடமத்தி, உடுவில் வடக்கு, சங்குவேலி, இணுவில் தென்மேற்கு இணுவில் கிழக்கு, இணுவில் மேற்கு இணுவில் தெற்கு, தாவடி கிழக்கு, தாவடி தெற்கு, தாவடி வடக்கு, சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் மத்தி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் மேற்கு, கந்தரோடை, ஏழாலை மேற்கு ஏழாலை தென்மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு, ஆகிய கிராம சேவைப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். -சி

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர் சேவை வகுப்பு 1 றிகுப் பதவியுயர்வு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 28ம் திகதி சனிக்கிழமை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பொது எழுதுநர் சேவை வகுப்பு 2 தரம் 'அ' வ் உள்ள உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்ற உள்ளார்கள்.

## ஷெல் தாக்குதலால் பயிர்கள் சேதம்

(மானிப்பாய்)

வலி-கிழக்கிலிருந்து அண்மையில் படையினரால் ஏவப்பட்ட ஷெல்களிலொன்று கோக்குவில் கிழக்கிலுள்ள வீடுத் தோட்டமொன்றில் வீழ்ந்து வெடித்தது.

இதனால் தோட்டத்தில் பயிரிடப்பட்ட கோவா, பீற்றூட் மற்றும் நூற்றுக்கணக்கான வாழைகள் என்பன பலத்த சேதத்துக்குள்ளாகின. -71

# இராணுவ அட்டூழியம், படுகொலைகளை நிறுத்தி பேச்சை ஆரம்பியுங்கள்

## கூட்டுறவுச் சபை அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் மீது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட, தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையினால் ஏற்படும் அழிவுகள், அவலங்கள், படுகொலைகள் ஆகியவற்றை உடனடியாக நிறுத்தக்கோரியும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையை நடத்தி அரசியல் தீர்வொன்றையும் எடுக்குமாறும் பொருளாதார தடையை நீக்கி மக்களை பட்டினிச்சாவிலிருந்து விடுவிக்குமாறும் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை அவசர கடிதமொன்றை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், கூட்டுறவு அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிற்கும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவம், கனரக யுத்த தளபாடங்களுடன் பல்வேறு செயல்களிலான இராணுவ நடவடிக்கை மூலம் யாழ். குடாநாட்டிலுள்ள அப்பாவி தமிழ் மக்களுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

இதனால் தமிழ் மக்கள் பெரும் துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

மக்கள் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதால் அப்பாவி பொதுமக்களின் உயிர்கள் பறிக்கப்படுவதுடன் அவர்களது சொத்துக்களுக்கும் பாரிய அழிவுகள் ஏற்படுத்தப்படுகின்றது.

1990ம் ஆண்டின்பின் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் கூட்டுறவு சொத்துக்களுக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. மேலும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகளினால் பல கூட்டுறவு பணியாளர்கள் பலியாகி உள்ளனர்.

இவர்களுக்கு முடிந்தளவு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் மேலும் கேட்கப்பட்டுள்ளது. கே-எ

# மன்னார் தாக்குதல் செய்தியை இராணுவம் மறுக்கிறது

(கொழும்பு)

மன்னார்ப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஒன்றில் அதிகளவான படையினர் கொல்லப்பட்டுள்ளதாக நேற்றுக்காலை வெளியான செய்திகளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க மறுத்துள்ளார்.

நேற்றுக்காலை வெளியான ஏஜென்ஸிச் செய்தியொன்று மன்னாரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலொன்றில் 170 படையினர் கொல்லப்பட்டதாக தெரிவித்திருந்தது. -ஃ-எ

# நரசிம்மராவுடன் பேசுவதற்கு நியூயோர்க்கில் சந்திரிகா முயற்சி

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் ஐ. நா. சபையின் 50-வது ஆண்டு நிறைவு விழாவில் பங்குபற்றி வரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, இந்தியப் பிரதமர் நரசிம்மராவை அங்கு வைத்து சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா-ராவ் பேச்சுக்கான விபரங்கள் எதுவும் இருதரப்பாலும் இதுவரையும் வெளியிடப்படாவிட்டாலும் வடக்குக் கிழக்கு இராணுவ நடவடிக்கை பற்றியதாக அவை அமையலாமென அவதானிகள் ஊகம் தெரிவித்துள்ளனர். -எ

# இனப் பிரச்னைக்கு தீர்வு காண ஐ. நா. செயலர் பூரண ஆதரவு

(வாஷிங்டன்)

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஆதரவு வழங்குவதாக ஐ. நா. செயலர் திரு. பூத்ரஸ் பூத்ரஸ் காலி ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. வின் 50வது ஆண்டு விழா நிகழ்வில் கலந்துகொள்ள அமெரிக்கா சென்ற ஜனாதிபதி சந்திரிக்காவை நியூயோர்க்கில் சந்தித்தபோதே ஐ. நா. செயலர் திரு. காலி சமாதான முயற்சிக்கான தனது ஆதரவைத் தெரிவித்தார்.

இலங்கை நிலைமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா திரு. காலிக்கு விளக்கிக் கூறியதாகவும் அவர் இதனை மிகுந்த கவனத்துடன் கேட்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கை பிரச்னை குறித்து யாழ். பிரஜைகள் குழு ஐ. நா. செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்தும் தெரிந்ததே. சி-எ

# இரு வாய்க்கால்கள் திருத்தி அமைப்பு

(தாளையடி)

வத்திராயன் தெற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத்தினர் தமது பகுதியிலுள்ள ஊர் எல்லை வாய்க்கால் மருதடி வாய்க்கால் என்பனவற்றை 'உலர் உணவுக்கான வேலைத்திட்டம் 1995' திட்டத்தின் கீழ் திருத்தியமைத்துள்ளனர்.

நடைபெற்ற இரு வேலைத் திட்டங்களில் எண்பது வீத பெறுமதியான ரூபா 18,200 க்கு உலர் உணவுப் பொருட்களை போரூட் நிறுவனம் வழங்கியுள்ளது.

கடந்த சில வருடங்களாக திருத்தியமைக்கப்படாதிருந்த இவ்விரு வாய்க்கால்களும் திருத்தியமைக்கப்பட்டதன் மூலம் இப்பகுதியிலுள்ள சுமார் ஒரு ஏக்கர் வயல் காணிகளில் தேங்கும் நீர் வீரகலி ஆற்றுக்குள் செல்ல வழியேற்பட்டுள்ளது. 163

# இன்று சூரிய கிரகணம் இங்கும் தெளிவாகத் தெரியும்

(கொழும்பு)

சூரிய கிரகணம் ஒன்று இன்று காலை 7-44க்கு ஆரம்பமாகி காலை 9-59 க்கு முடிவடையும்.

காலை 7-47 க்கு இலங்கையில் இதனை மிகத்தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

சூரிய கிரகண வேளையின் போது சூரியனை நேரடியாகப் பார்க்க வேண்டாமென பொது மக்களுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியப் பிராந்தியத்தில் பல தசாப்தங்களின் பின்னர் இன்று காலை இடம்பெறவுள்ள சூரிய கிரகணத்தை பார்ப்பதற்கு பல பிராந்திய நாடுகளைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் ஆயத்தமாகி வருகிறார்கள்.

ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய பல நாடுகளில் சூரிய கிரகணத்தை முழுமையாகக் காணக்கூடியதாக இருக்கும். பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம், போர்னியோ ஆகிய இடங்களிலும் சூரிய கிரகணம் தோன்றும்.

இந்த கிரகணத்தால் ஏற்படும் அறிவியல் பூர்வமான விடயங்கள் பற்றி ஆராய்ந்து தெளிவாக எடுத்துக் கூறுவதற்காக விஞ்ஞானிகள் பலர் பல இடங்களில் முகாமிட்டுள்ளனர்.

இதேபோன்ற முழு சூரிய கிரகணம் 1999-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி மீண்டும் ஏற்படுமென ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர். -கே-எ

# மாணவர் மதிய உணவு முத்திரை

[கொழும்புத்துறை]

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் அதன் அங்கத்துவ கிளைச்சங்கங்கள் மூலம் தற்போது பாடசாலை மாணவர்களின் 10 ஆவது தொடர் மாணவர் மதிய உணவு முத்திரைக்குரிய பொருட்களை வழங்கி வருகின்றனர். 154

# காலாவதியான பிஸ்கட்டுகள் பறிமுதல்

[கொழும்புத்துறை]

சாவகச்சேரி நகர்ப்பகுதிக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இருபத்தியொரு பிஸ்கட் பைக்கற்றுகள் நகரப் பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு. குகளிங்கடஸ்ஸினால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. 154

# செப்ரிசிமியாவினால் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசிமியா நோய்க்கிலக்காகி நேற்றும் ஓர் குழந்தை யாழ். போதனா வைத்திய சாலையில் இறந்துள்ளது.

யாழ். நகர் ஐந்து சந்தியை சேர்ந்த தேசிங்கராசா மோகனப்பிரியா [வயது 3] என்ற குழந்தையே மரணமானவர் ஆவார். 170

# ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவ வாகன அணி

(தாளையடி)

ஆனையிறவு, இயக்கச்சி இராணுவ முகாம்களிலிருந்து இராணுவ வாகன தொடர் அணியொன்று நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்குச் சென்றது.

இராணுவ வாகன தொடர் அணி பேரிரைச்சலுடன் அதிகாலைவேளை சென்றமையால் மாசார் சோரன்பற்று, முகாவில், கரந்தாய் கிராம மக்கள் அச்சத்துடன் அன்றைய இரவைக் கழித்தனர்.

கடந்த இரு நாட்களாக வடமராட்சி கிழக்கு பகுதி குடியிருப்புகளுக்கு மேலாக விமானங்கள் அடிக்கடி பறந்து செல்கின்றன. 163-எ

# வெற்றிலைக்கேணி முகாமருகில் கடற்படை பாதைப் படகு

(தாளையடி)

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய கடற்பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடற்படையின் பாதைப்படகு ஒன்று கரைக்கு மிக அண்மையில் நங்கூரமிட்டுள்ளது. இதற்கு பாதுகாப்பு அளிப்பதற்காக ஒன்பது பீரங்கிப் படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்குத் தேவையான இராணுவ தளபாடங்கள் இதிலிருந்து தரையிறக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. -163-எ

## பதுங்கு

(1ம் பக்க தொடர்ச்சி)

யாக எமது மனித வளத்தைக் காப்பது முதன்மை பெறுகிறது.

எமது மக்களை அழிப்பதற்காக மிகப் பாரிய நடவடிக்கைகளைப் பகைவன் மேற்கொண்டு வருகிறான்.

மனிதவளம் பெறுமதிமிக்கது. மனிதவளத்தை இல்லாதொழிப்பதன் மூலம் ஒரு இனத்தின் அடிவேரையே அசைத்துவிடலாம். போர்க்களத்திற்கு அப்பாலும் நீண்டதூர எறிகணை வீச்சு, விமானக்குண்டு வீச்சு ஆகியவற்றின் நோக்கமே இதுதான்.

பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முனைப்புடன் செயற்படுத்துதல் மூலம் எமது மக்கள் எதிரியின் மனிதநேய மற்ற நோக்கத்தை முறியடிக்கலாம்.

1. இல்லங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், மக்கள் கூடுமிடங்கள் ஆகியவற்றில் பதுங்கு குழிகளை அமைத்தல் அவசியம். இவற்றை அமைப்பதற்கான ஒத்துழைப்பை ஊர்காப்புக் கழகங்கள் நல்கத் தயாராகவுள்ளன.

2. எதிரியின் தாக்குதலினைக் காயமுற்றுத் தவிப்போர்க்குக் குருதிக்கொடை புரிதல் மிக உன்னதமான மனிதநேயப் பணியாகும். தயங்காது விரைவாக வட்டச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்வதன் மூலம் அவசியம் ஏற்படும்போது குருதிக் கொடைக்குத் தயாராகுங்கள்.

3. எதிரியினால் ஏவப்படும் எறிகணைகளில் சில வெடிக்காமலிருப்பதும் உண்டு. அல்லது எதிரி தான் பின்வாங்குமிடங்களில் மனித அழிவை ஏற்படுத்தும் முகமாக வெடிப்பொருட்களை விட்டுச் செல்வதுமுண்டு. இனங்காணமுடியாத பொருட்களைக் காணுமிடத்து அவற்றைக் கையாளாது - அவ்விடத்திலேயே விட்டுவைத்து அயலிலுள்ள எமது செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்கள் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பர்.

மேற்படி நடவடிக்கைகள் யாவும் எமது மனித வளத்தைக் காப்பதற்கான உயிரழிவைத் தடுப்பதற்கான உடனடிச் செயற்பாடுகளே ஆகும். இவற்றைக் கைக்கொள்ளுமாறு எமது மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். -எ

## வைத்திய சேவை விஸ்தரிப்பு

[கொழும்புத்துறை]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையினர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமது நடமாடும் வைத்திய சேவையினை விரிவுபடுத்திச் செயற்பட்டு வருகின்றனர். -154

## தமிழ் மக்களின்

(1ம் பக்க தொடர்ச்சி)

மீறல்களைக் கண்டியாது ஐ. நா. மௌனம் சாதிக்கக் கூடாது எனச் சில மனித உரிமை அமைப்புக்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டமும் நடத்தின.

இந்த ஆர்ப்பாட்டம் நடந்த வேளை, ஐ. நா. சபையின் 50வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்படப் பல நாட்டுத் தலைவர்கள் ஐ. நா. தலைமைச் செயலகத்திற்குச் சமூகம் அளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. கே-எ

## வெற்றுக்

(1ம் பக்க தொடர்ச்சி)

கரமானதாகும். இதனால் பார்வையை இழக்க நேரிடலாம் என யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்தா இது குறித்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படும் எந்த முறையும் கிரகணத்தை கண்ணால் பார்க்க பாதுகாப்பானதல்ல, ஆரம்பம் முதல் முடியும் வரை சூரியனை நேரடியாகவோ அல்லது வேறுவகையிலோ பார்த்தலை தவிர்த்தல் வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் எனவும் வைத்திய கலாநிதி ஸ்ரீகாந்தா கேட்டுள்ளார். [எ]

# கொழும்பு வந்த எண்ணெய்க்கப்பல் காலிக்கு திருப்பப்பட்டது

(கொழும்பு)

வளைகுடா நாடொன்றில் இருந்து கொழும்புத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த எண்ணெய்க் கப்பல் ஒன்றை, அரசாங்கம் காலித் துறைமுகத்திற்குத் திருப்பி அனுப்பியுள்ளது.

இக்கப்பலில் உள்ள எரிபொருட்கள் காலித் துறைமுகத்தில் வைத்தே இறக்கப்படவுள்ளன.

கொலன்னாவ, ஊறுகொட வத்த எண்ணெய்க் குதங்களின் மீதான தாக்குதல்களின் பின்னர், வெளிநாட்டிலிருந்து எரிபொருட்களை எடுத்து வந்த முதலாவது கப்பல் இதுவாகும்.

எரிபொருள் தாங்கிய கப்பல்களைக் கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி, அவற்றிலிருந்து எரிபொருட்களை இறக்குவதால், துறைமுகப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படலாமென்ற அச்சம் காரணமாக இந்த முன்னெச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கொண்டு வரும் எண்ணெய்க் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்துக்கு அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. எ

# நேற்று அதிகாலை முதல் அகோர ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் மக்கள் குடிமனைகளை நோக்கி இராணுவத்தினர் நேற்று அதிகாலை இரண்டு மணிமுதல் அகோர எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமிருந்தனர். காலை ஆறுமணி வரை இத்தாக்குதல்கள் தொடர்ந்தன.

பகலிலும் குடிமனைகளை நோக்கி பரவலாக எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றன

## ஒருவர் பலி

நேற்றைய ஷெல் தாக்குதலின்போது காயமடைந்த ஒருவர் பின்னர் வைத்தியசாலையில் மரணமானார். -எ

# சனி இரவு பெய்த மழையால் இராணுவநடவடிக்கை பாதிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவு பரவலாகப் பெய்த பெருமழையால் இராணுவ நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறியதாக வெரிதாஸ் தெரிவித்துள்ளது.

குறிப்பாக விமானப் படையினரின் நடவடிக்கைகள் மழை மேகங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும்,

இந்த மழை மேகங்களால் உயரத்திலிருந்து தரையை அவதானிக்க முடியாதிருந்ததாகவும்,

தாழப் பறப்பதற்குப் புலிகளின் ஏவுகணை அச்சம் விமானிகளுக்கு அச்சுறுத்தலாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மழை தொடர்ந்தும் பெய்தால் இராணுவ கனரக வாகனங்களின் நகர்வில் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் கூறப்படுகிறது. எ

# யாழ். நகரைசில தினங்களில் கைப்பற்றுவது முடியாத காரியம்

(கொழும்பு)

யாழ். நகரை சில நாட்களில் கைப்பற்றுவது என்பது கஷ்டமான பணியாகவேயிருக்குமென ஏ.எவ்.பி செய்தியாளர் அமல் ஜயசிங்க நேற்றிரவு பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இராணுவம் தற்பொழுது யாழ். நகரிலிருந்து குறிப்பிட்ட தூரத்திலிருந்தாலும் மிகுதி இராணுவ நடவடிக்கையை தொடர்வதற்குப் பெருந்தொகையான இராணுவத்தினர் தேவையாக உள்ளது.

புதிய தகவலின்படி ஞாயிற்றுக்கிழமை இராணுவத்துக்கெதிராக பெரியதொரு தாக்குதலை விடுதலைப் புலிகள் தொடங்கியிருக்கிறார்கள். இரண்டு பக்கத்து நிலவரங்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய சண்டை ஒன்று நடைபெறுகின்றது என தெரியவருகிறது என்றும் அமல் ஜயசிங்க தெரிவிக்கிறார். -ம-எ

## வீதி விளக்கு இல்லை

(அரியாலை)

யாழ்-நல்லூர் பின்வீதி முடமாவடி பகுதியில் வீதி விளக்குகள் இல்லாததால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். -59

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களினதும் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் இன்று 24ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நான்கு மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி சண்டிலிப்பாய் வட்டச் செயலகம் கேட்டுள்ளது. -எ

## சாவகச்சேரிக்கு இடமாற்றம்

(அரியாலை)

கோப்பாய்ப்பிரிவு உதவிஅரசாங்க அதிபர் அலுவலகம் சாவகச்சேரி நகராட்சி மன்ற மின்சாரப்பகுதி அலுவலக மண்டபத்தில் தற்பொழுது இயங்கி வருவதாக அறியப்படுகின்றது. -59

# கொழும்பில் பொலிஸ் சுட்டு இரு சிங்களவர் பலி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினமிரவு பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் இருவரும் சிங்களவர்களெனவும், ஊரடங்கு அமுலிலிருந்த வேளை வீதியால் சென்று கொண்டிருந்த இவர்களை பொலிஸார் அச்சத்தினால் சுட்டதாகவும் கூறப்படுகிறது.

புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் படையினர் மேற்கொள்ளும் துப்பாக்கிப் பிரயோகங்களினால் கொழும்பில் சிங்களவர்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. -எ

# தீபாவளி கொண்டாட்டங்கள் கொழும்பிலும் சோபிக்கவில்லை

(கொழும்பு)

யாழ்., வன்னி பகுதிகளைப் போன்றே கொழும்பிலும் இம்முறை தீபாவளிக் கொண்டாட்டங்கள் சோபிக்கவில்லை; மிக அமைதியாகவே இடம்பெற்றன.

கொழும்பு மாநகரில் சில இந்து ஆலயங்களில் தீபாவளி விசேட ஆராதனைகள் இடம்பெற்றபோதிலும் பாதுகாப்புக் கருதி அவற்றில் கலந்து கொண்டோரின் தொகை குறைவாகவே காணப்பட்டது.

பலரும் வீடுகளில் இருந்தவாறே அங்கு தீபாவளியை அமைதியாக அனுஷ்டித்தனர்.

யாழ் குடா வீதிகளில் தீபாவளி தினமான நேற்றைய தினமும் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்த மக்கள் கூட்டத்தையே காண முடிந்தது. எ

# இரவு நேர ஊரடங்கு கொழும்பில் நீக்கம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரிலும் மற்றும் சில பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக அமுலிலிருந்த இரவு நேர ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து இந்த ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட சில பகுதிகளில் இரவு வேளைகளில் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. -எ

# வேடிக்கை பார்ப்பதை தவிர்க்க அரசு கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் சம்பவங்கள் நடைபெறும் வேளைகளில் அவற்றை வேடிக்கை பார்ப்பதற்கென செல்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை அரசு கேட்டிருக்கின்றது.

கடந்த சில தினங்களாக படையினரின் சூட்டுச்சம்பவங்களின்போது பல சிங்கள பொதுமக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதையடுத்தே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. -எ

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.

# இராணுவ முயற்சிக்கு எதிராக விடுதலைப்புலிகள் கடும் சமர்

(லண்டன்)

வலிகாமத்தில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தற்போது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவருவதாக இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்ததாக பி.பி.சி. நேற்றிரவு தெரிவித்தது.

கடந்த சனிக்கிழமை இரவு இராணுவ முன்னேற்றத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர், இந்த மோதலில் 29 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். இதைத்தொடர்ந்து நேற்று முன்னேற்ற முயற்சியில் இராணுவம் ஈடுபடவில்லை.

மேற்கொண்டும் முன்னேற்ற முயற்சியைத் தொடர்ந்தால்

## பி.பி.சி தகவல்

விடுதலைப் புலிகள் கடும் எதிர்ப்பைக் காட்டுவார்கள் என இராணுவம் எதிர்பார்க்கின்றது எனவும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். -எ

## வலி கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அரசின் தகவலின் கடந்த ஆறு நாள் இராணுவ நடவடிக்கையில் மட்டுமே நான்கு அதிகாரிகள் உட்பட 131 படையினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1ம், 5ம், 6ம் நாள் மோதல்களில் விடுதலைப்புலிகளால் ஐந்து டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டும் நான்கு டாங்கிகள், ஒரு பவள் கவச வாகனம், மற்றும் இரு யுத்த கனரக வாகனங்கள் தாக்குதலுக்கு இலக்காகி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சி-எ

## மொனருகலை

(1ம் பக்க தொடர்ச்சி)

இக்கிராமவாசிகளின் குடியிருப்புக்கள் தாக்குதல் நடாத்தியோரால் தீக்கிரையாக்கப்பட்டதாக வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்தது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு சென்ற பொலிஸ்காரர் ஒருவர் தாக்குதலை நடத்தியோர் விட்டுச்சென்ற மிதிவெடியால் காலையிழந்தார். இச்சம்பவத்தையடுத்து இக்கிராமத்திலிருந்து சிங்கள மக்கள் வெளியேறியுள்ளனர். எ

## வீர வணக்கமும் வித்துடல் விதைப்பும்

(யாழ்ப்பாணம்)

22-10-95 அன்று யாழ். மாவட்டத்தில் வலி-கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தின் 'சூரியக்கதிர்' நடவடிக்கையை எதிர்த்து மோதிய கடும் சண்டையில் வீரச் சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை தமிழ்நாதன் (நவரெத்தினராசா சிவகுமார், செல்வா வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு க. மு இருபாலை ரோட், கோண்டாவில் கிழக்கு) அவர்களின் வித்துடல் இன்று பிற்பகல் 3-00 மணியளவில் பலாலி வீதி கந்தர்மடம் சனசமூக நிலையத்தில் மக்களின் இறுதிவீர வணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு மாலை 4-00 மணியளவில் நடைபெறும் இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும். எ

## தமிழ்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யாக நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை உடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று கோரியும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் நோர்வே, டென்மார்க், லண்டன், இத்தாலி போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து வந்த 10,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசுக்கு எதிரான பல கோஷங்கள் இப்பேரணியில் எழுப்பப்பட்டன.

பேரணியின் முடிவில் பல்வேறு நாடுகளிலிருந்தும் இருந்து வந்த பிரதிநிதிகள் ஒழுங்கு செய்த கூட்டத்தில் தமிழ் மக்கள் இலங்கையில் படும் துன்ப துயரங்கள் பற்றி எடுத்துக் கூறியதோடு இவர்களுக்கு வேண்டிய சுயநிர்ணய உரிமை பற்றியும் கூறினர்.

கூட்ட முடிவில் ஐரோப்பிய நாடாளுமன்ற தலைவருக்கு பல்வேறு கோரிக்கைகளுடன் தமிழ்மக்களின் துன்பதுயரங்கள் குறித்து விளக்கங்களுடனான மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. கே-எ